உ
சிவமயம்



# திருமதி இராஜராஜேஸ்வரி சரவணபவானந்தன்
(கண்ணன்)

# நினைவு மலர்

20 . 02 . 2005

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் நீங்காத அமரஜோதி



திருமதி இராஜராஜேஸ்வரி சரவணபவானந்தன்
(கண்ணன்)

மலர்வு 01.06.1945 உதிர்வு 21.01.2005

நிதி வெண்பா.

ஆண்டு தாரண அணுகுதை எகாதசிதிதி
பூண்ட குருவாரம் ரோகிணியில் - எல்லவரும்
கூடித் துயருறவே இராஜராஜேஸ்வரி மாது
நாடினாள் நம்பனடி நயந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை செய்வதால்

1. மனம் தெளிவடைகின்றது.
2. சிந்தனை குழப்பமடையாது ஒரு நிலைக்கு வருகிறது.
3. நினைவாற்றல் பெருகுகின்றது.
4. மனதில் நம்பிக்கை துளிர்விடுகின்றது.
5. கடமையைச் சரியாகச் செய்ய வேண்டும் என்ற உணர்வு மேலிடுகின்றது.

மேலே கூறப்பட்டுள்ள காரணங்களால் திறமை வளர்ந்து எடுத்த முயற்சியில் வெற்றி பெற முடிகின்றது.

சேவை செய், அன்பாய் இரு, தானம் செய், தியாகம் செய், மனத்தூய்மையுடன் இரு, தியானம் செய், வாழ்க்கை உன்னை எல்லையற்ற ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்லும்.

*சுவாமி சிவானந்தர்.*

உ

## ஆலய தரிசனம் சாலவும் நன்று

மக்களாகிய நாம் கடவுளது அருளைப் பெற்று நல்வாழ்வு வாழப் பலவழி முறைகளைக் கையாளுகின்றோம். அவ்வழி முறைகளுள் தலையாயது ஆலய தரிசனமாகும். கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று அறிவுடையோர் கூறுவதை நாம் சிந்திக்கின்றோம். ஆ என்பது ஆன்மா, லயம் என்பது ஒழுங்காவது. எனவே மனம் ஒருவழிப்பட்டு இறை அருளைப் பெறுவதற்கு ஆதாரமாக அமைக்கப்பட்ட இடமே ஆலயம்.

சைவ வாழ்க்கைக்கு ஏற்ற சூழல் ஆலயத்தில் அமைய வேண்டுமாயின் அங்கு பரிசுத்தமும், ஒழுங்கும், அமைதியும் நிலவவேண்டும். கோயிலைப் புனிதமாக வைத்திருப்பது அங்கு சென்று வழிபாடு செய்யும் மக்கள் கடமையாகும். ஆலயத்தை வெறும் பிரார்த்தனை மண்டபம் என்று சொல்லாமல் இறைவன் நமக்காக வந்து தங்குகின்ற இடமாகக் கருதவேண்டும்.

'அன்பே சிவம்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

சலம்பூவொடு தூப மறந்தறியேன்
தமிழோடிசை பாடன் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

*(திருநாவுக்கரசர்)*

## திருவாசகம்

(கி) கொம்பரில்லாக் கொடிபோல லமந்தனன் கோமளமே
வெம்புகின்றேனை விடுதிகண்டாய் விண்ணர் நண்ணுகில்லா
உம்பருள்ளாய் மன்னு முத்தர கோச மங்கைக்கரசே
பம்பரமே நிலனே அனல் கால் ஒடு ஒப்பவனே

*(மாணிக்கவாசகர்)*

## திருவிசைப்பா

தனதனற் றோழா சங்கராசூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற்றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன்றுடைய தோர் கரும்பே
அனகனேகுமர விநாயகசனக
அம்பலத்தமரசேகரனே
உனகழலிணை என்னெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமாநுகரே.

*(திருமளிகைத்தேவர்)*

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங்குடிகுடி ஈசற்காட் செய்மின்குழாம் புகுந்து
அண்டங்கடந்த பொருளள வில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டு மின்று மென்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே

*(சேந்தனார்)*

## புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச்சிரத்தின் மேலாம்
சிற்பரவியோம மாகுந் திருச்சிற்றம் பலத்துணின்று
பொற்புடனடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

*சேக்கிழார்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் பொன்மொழிகள்

1. எண்ணங்களால் மனதைக் குழப்பிக் கொள்ளாதே.
ஒரு எண்ணத்தைச் செயற்படுத்துவது கூட மிகக்கடினமானது. எனவே, பலசிந்தனைகளினால் மனதை நிரப்பிச் சிதறச் செய்யாதே.
*(ஸ்ரீ சாரதா தேவி அம்மையார்)*

2. எச் செயலிலும் வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியையும் மன உறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும்.
*(சுவாமி விகோனந்தர்)*

3. எவ்வளவுக்கு எவ்வளவு பணிந்து நடக்கின்றோமோ? அவ்வளவுக்கு அவ்வளவு நன்மைகள் ஏற்படும்.
*(இராமண மஹரிஷி)*

4. ஒழுக்கம் என்பது மீண்டும் மீண்டும் செய்யப்படும் நல்ல பழக்கங்களால்தான் உருவாகின்றது. எனவே மேலும் மேலும் மேற்கொள்ளும் நல்ல பழக்கங்களால் ஒழுக்கத்தை நிலை நிறுத்த முடியும்.
*(சுவாமி விவேகானந்தர்)*

5. கடவுளின் குழந்தைகளான மக்களுக்குத் தொண்டு செய் அவர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம் வாழ்க்கையில் வெற்றி பெறுவாய்.
*(சுவாமி விவேகானந்தர்)*

6. உடற்பயிற்சி செய்பவனுக்கு உடலில் ஒரு தெம்பு வருவது போல் தியானம் செய்பவனுக்கு ஆத்ம சக்தி பெருகும்.
*(கிருபானந்த வாரியார்)*

7. உண்மை பேசி உத்தமனாக வாழ்.
*(மகாத்மா காந்தி)*

8. நல்லார் இணக்கத்தை வளர்த்துக் கொள். நல்லவனாக இருக்க முயற்சி செய், காலக்கிரமத்தில் நீ வெற்றிவெறுவாய்.
*(அன்னை சாரதா அம்மையார்)*

9. இதய பூர்வமான காரியங்களைச் செய்பவனுக்கு இறைவன் உதவி புரிகின்றான். உன்னால் இயன்ற வரையில் நல்ல செயல்களைச் செய்.
*(சுவாமி விவேகானந்தர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கருணை உள்ளம் கொண்ட ஒருவன், அல்லும் பகலும் பிறருக்கு நன்மை தரும் செயல்களையே செய்கின்றான். சுயநலம் கொண்டவன், பயனற்ற காரியங்களில் மூழ்கி இன்னற் படுகின்றான்.

*(ஸ்ரீ நாராயணகுரு)*

11. நல்லதைச்செய் மகிழ்ச்சியாய் இருப்பாய்.
உன்னுடைய சுகத்திற்குக் காரணம் நீயாகவே இருக்கிறாய்.

*(மஹாபுருஷர் சுவாமி சிவானந்தர்)*

12. மனமே எல்லாம். இது சுத்தமானது, இது அசுத்தமானது என்பதை மனத்தினாலேயே ஒருவன் உணர்கிறான். பிறரிடத்துக் குற்றங்காணும் ஒருவன், முதன் முதல் தன்மனத்தையே மாசுபடுத்திக் கொள்பவன் ஆகிறான்.

*(அன்னைசாரதாதேவி)*

13. பரிசுத்தமான மனம் உடைய ஒருவன், எல்லாவற்றையும் பரிசுத்தமானதாகவே காண்கின்றான்.

*(அன்னை சாரதாதேவி)*

14. எண்ணமே தான் கடவுள், கடவுளே தான் எண்ணம். எண்ணத்தைப் பரிசுத்தப்படுத்தினால், கடவுளைக் காணலாம்.

*(காயத்திரிசித்தர்)*

15. கடினமான தெய்வ சாதனைகளை மக்கள் செய்ய வேண்டிய தேவையில்லை. சிறியதான காயத்திரி ஜெபத்தைச் செய்து பாருங்கள். இதனாலேயே சகல சித்திகளும் உண்டாகிவிடும்.

*(ஸ்ரீ ராமகிருஷ்ண பரமகம்சர்)*

16. சத்தியத்தைக் கைவிடாதே. எப்போதும் உற்சாகத்துடன் இரு. நல்ல காரியங்களைச் செய்வதில் ஒரு நாள் கூட அசிரத்தையாக இருந்து விடாதே.

*(ஸ்ரீ இராமபிரான்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்.

## கடவுள் வாழ்த்து

"கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே."

கொன்றை மாலை அணிந்த சிவபெருமானின் திருக்-குமாரரான விநாயகக் கடவுளின் இருபாதங்களையும் எப்பொழுதும் வணங்குவோம்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் - 1
*(கருத்து) தாயும் தந்தையும் முன்னதாக அறியப்பட்ட தெய்வங்களாவர்.*

ஆலயம் தொழுவது சாலவும் நன்று - 2
*(கரு) கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது மிகவும் நல்லது.*

இல்லற மல்லது நல்லற மன்று. - 3
*(கரு) மனையாளோடு நடத்தும் இல்லமே நல்லறமாகும்.*

ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் - 4
*(கரு) வறியவர்களுக்குக் கொடாதவர் செல்வத்தை, கள்வர் போன்ற கொடியவர்கள் பறித்துச் சென்று விடுவர்.*

உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு - 5
*(கரு) உணவை மிதமாக உண்பது பெண்களுக்கு அழகாகும்.*

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் - 6
*(கரு) ஒருவன் தனது ஊர்மக்களைப் பகைத்துக் கொண்டால் குடும்பத்தோடு அழிந்து போவான்.*

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும் - 7
*(கரு) கணிதமும், இலக்கணமும் மனிதர்க்கு இரு கண்கள் போன்றவை.*

ஏவா மக்கள் மூவா மருந்து - 8
*(கரு) தாய் தந்தையர் கட்டளையிடுமுன் குறிப்பறிந்து செய்கின்ற பிள்ளைகள் அவர்களுக்குத் தேவாமிர்தம் போன்றவர்கள்.*

ஐயம் புகினும் செய்வன செய். - 9
*(கரு) பிச்சை எடுத்து வாழ்ந்தாலும், செய்ய வேண்டிய நல்ல காரியங்களைச் செய்.*

ஒருவனைப் பற்றி ஓரகத்திரு. - 10
*(கரு) நற்குணமுடைய ஒருவரைத் துணையாகப் பற்றிக் கொண்டு ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்திரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூதுரை

## அறிவு, செல்வம், குணம்.

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான் கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு - மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம். 1

(கரு) *ஒருவருக்கு அறிவு அவர் கற்ற நூலின் அளவாகவும், செல்வம் அவர் செய்த தவத்தின் அளவாகவும், குணம் அவர் பிறந்த குலத்தின் அளவாகவும் இருக்கும்.*

## உண்மைச் சுற்றம்

அற்ற குளத்தின் அறுநீர்ப்பறவை போல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. 2

(கரு) *வறுமை வந்த போதும், சேர்ந்திருந்து துன்பத்தையும் பகிர்ந்து கொள்பவரே சிறந்த உறவினர் ஆவர்.*

## நல்லவரால் எல்லோருக்கும் நன்மை

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம் - தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும்மழை. 3

(கரு) *நல்லோரைச் சேர்ந்த எல்லோரும் பயனடைவர்*

## மனையாள் இல்லாத மனை

இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின் - இல்லாள்
வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலி கிடந்த தூறாய் விடும். 4

(கரு) *நற்குண நற்செய்கைகள் பொருந்திய மனைவி இருக்கும் வீடே எல்லாப் பொருளும் நிறைந்த வீடு. அவ்வாறு இல்லாத வீடு எவரும் நெருங்குதற்கரிய புலி தங்கி வாழும் புதர் போல் ஆகிவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்வழி

### கவலையுறுதல் தகாது.

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற்போகா - இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில். 5

*(கரு) இன்பமும் துன்பமும் வினைப்பயன்களாகும். அவை தவறாது வந்து கொண்டிருக்கும். ஆதலால் இன்பத்தை விரும்பியும் துன்பத்தை வீணே வெறுத்தும் வீணே கவலைப்படுதல் கூடாது*

### உயர் குடிப்பிறந்தோர் சிறப்பு

ஆற்றுப் பெருக்கற் றடிசுடும் அந்நாளு மவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை யென மாட்டார் இசைந்து. 6

*(கரு) உயர்குடிப் பிறந்ததோர் வறுமையுற்றாலும் தம்மிடம் வந்து பிச்சை கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்ல மாட்டார்.*

### இட்டு உண்டு இருக்க.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா
நமக்கும் அதுவழியே நாம் போம் அளவும்
எமக்கென் என்று இட்டு ண்டு இரும். 7

*(கரு) இறந்தவர் பொருட்டு அழுவதால் பயனில்லை. மாண்டவர் மீண்டும் வரமாட்டார், எனவே கவலையின்றி அறம் செய்து வாழ்க.*

### உழவின் சிறப்பு

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லைக் கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 8

*(கரு) உழுது பயிர் செய்து வாழும் வாழ்க்கைக்கு ஒப்பானது வேறு இல்லை. அதுவே குற்ற மற்றதும் அழிவு இல்லாததுமான வாழ்க்கையாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி இராஜராஜேஸ்வரி சரவணபவானந்தன் அவர்களின் வாழ்க்கை நினைவு

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் இயற்கை வளம் நிரமபியதும், மேற்குலகத்தவரது கண்களை ஈர்த்து இழுக்கக்கூடிய கவர்ச்சியுள்ளதுமாக விளங்குவது நமது இலங்கைத் திருநாடு, இந்நாட்டின் கிரீடம் போல் மிளிர்ந்து கொண்டிருப்பது யாழ்ப்பாணம். கல்வி அறிவு மிக்க சான்றோர் வாழ்ந்து வாழ்வழித்த நாடும் இதுவன்றோ,

யாழ் - பலாலி வீதியில் நான்கு மைல் தொலைவில் உரும்பராய் - ஊரெழு என்னும் பட்டினசபைக் கிராமங்கள் அமைந்துள்ளன. மக்களைச் சமயநெறியில் வழிப்படுத்தும் வகையில் கற்பக விநாயகர் ஆலயம் ஞானவைரவர் ஆலயம், சிதம்பர சுப்பிரமணியர் ஆலயம், பர்வத பத்தினி ஆலயம் என்பன ஒருங்கே அமைந்து சிறப்புற விளங்கும் பெருமை வாய்ந்தன.

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. திருமதி நவரத்தினம் இராஜலிங்கம், பரிபூரணம் தம்பதிகளின் அருந்தவப் புதல்வியாகப் பிறந்தவர் இராஜராஜேஸ்வரி என்னும் மங்கை நல்லாள்.

இராஜராஜேஸ்வரி தமது தாய்தந்தையரது அரவணைப்பில் நன்கு வளர்ந்து ஆரம்ப கல்வியை ஊரெழு கணேசவித்தியாலயத்திலும் சிரேஷ்ட வகுப்புக் கல்வியை உரும்பராய் இந்துக் கல்லூரியிலும் கற்றுத் தக்கோரால் போற்றப்படும் ஒழுக்க சீலராய் வாழந்தார்.

திருமணப் பருவம் எய்தியதும், அவர் இல்லற வாழ்வில் பிரவேசித்து நல்வாழ்வு வாழவேண்டும் என்ற பெருநோக்கம் கொண்ட பெற்றோர். உரும்பராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், பயிற்றப்பட்ட தொழில் நுட்பத்துறைக் கல்வி ஆசிரியராகவும், திரு. திருமதி முத்துத்தம்பி தம்பித்துரை, மகேஸ்வரி தம்பதிகளின் ஏக புத்திரன் திரு. சரவணபவானந்தன் அவர்களுக்கு *1972.05.22* இல் திருமணம் செய்து வைத்து வாழ்வளித்தனர். தம்பதியினர் இருவரும் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு உரும்பராயில் வாழ்ந்து வரும் நாளில் இறையருளால், புதல்விகளாக திருமகள், திருவேணி, கலைமகள் என்பவர்களையும், புதல்வர்களாக திருக்குமரன், கமலவண்ணன் இருவரையும் பெற்றெடுத்துப் பெருமகிழ்வெய்தினர்.

பிள்ளைகள் ஐவரையும் கண்ணை இமைகாப்பதுபோல நன்கு பேணிக்காத்துக் கல்வி புகட்டி, சான்றோராக்கிய பெரும்பங்குக் குரியவர் இறைபதம் எய்திய தாய் இராஜராஜேஸ்வரி என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு உரியவயதில் திருமணம் செய்து அவர்களையும் வாழவைக்க வேண்டும் என்ற எண்ணத்தை நிறைவேற்றுமுகமாக சிரேஷ்ட புத்திரி திருமகளை கல்வியங்காடு சச்சிதானந்தம் நந்தகஜேந்திரனுக்கு விவாகம் செய்து கொடுத்ததன் பயனாக அகல்யா என்ற பேரப்பிள்ளையையும் மகன் திருக்குமரன் சாவகச்சேரியைச் சேரிந்த செல்வரத்தினம் தர்சினியை மணந்து குமரதர்சனா, தர்மப்பிரியா ஆகிய இரு பேரப்பிள்ளைகளையும், புத்திரி திருவேணி கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகநாதன் யோகேஸ்வரன் என்பவருக்கு விவாகம் செய்து கொடுத்தன் பேறாக கலைவாணன், கலாவர்த்தனன் என்ற இரு ஆண் பேரப்பிள்ளைகளையும், நான்காவதான பிள்ளை மகள் கலைமகள் உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது லண்டனில் வசிப்பவருமாகிய சிருஷ்ணானந்தன் சிவதாசனை மணந்து அங்கு வாழ்கின்றனர். கடைசிமகன் கமலவண்ணன் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் கல்விகற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இவ்வுலக வாழ்வைத்துறந்து, தமது பிரிய நாயகன், புத்திரர், உறவினர்கள் துயர் அடைய தாரண வருடம் தைமாதம் வியாழக்கிழமை நேரம் இரவு 2.15 மணியளவில் ஏகாதசித் திதியில் இறைவன்பாதத்தை நண்ணினார். அன்னாரது ஆத்மா சாந்தி அடைவதாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரும் முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவ துங்கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே!

(பட்டினத்தார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்துப் பிள்ளையார் அருளிச்செய்த
## உடற்கூற்று வண்ணம்

ஒரு மடமாதும் ஒருவனுமாகி
இன்பசுகம் தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறுசுரோணிதம் மீது கலந்து
பனியில்ஓர் பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்து புகுந்து திரண்டு
பதும அரும்பு கமடம் இதென்று
பார்வை மெய் வாய் செவி கால் கைகள் என்ற
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து
மகளிர்கள் சேனை தரவணையாடை
மண்பட உந்தி உதைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓரறிவீரறி வாகிவளர்ந்து
ஒளிநகைஊறல் இதழ்மட வாரும்
வந்துமுகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை மொழிந்து
வாஇருபோவென நாமம் விளம்ப
உடைமணியாடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து
தேடியபாலரொ டோடி நடந்து
அஞ்சுவதாகி விளையாடியே

உயர் தருஞான குரு உபதேசம்
முத்தமிழின் கலையும் கரைகண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து
மயிர்முடி கோதி அறுபதநில
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொன் இலங்கும் பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க
மதனசொரூபன் இவன்என மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழிகொண்டு சுழிய எறிந்து
மாமயில்போல் அவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர் பிறகோடி
மங்கல செங்கல சந்திகள் கொங்கை
மருவமயங்கி இதழ் அமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முதலாகி முதுபொருளாய்
இருந்த தனங்களும் வம்பில் இழந்து
மதனசுகந்த விதனம் இதன்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வளமையும்மாறி இளமையும்மாறி
வண்பல்விழுந்து இருகண்கள் இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரை வந்து
வாத விரோத குரோதம் அடைந்து
செங்கையினில் ஓர் தடியும் ஆகியே

வருவது போவது ஒருமுதுகூனு
மந்தியெனும் படிகுந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர்வந்து
வாயறியாமல் விடாமல் மொழிந்து.
துயில்வரு நேரம் இருமல்பொறாது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து சுணையும் அழிந்து
தோகையர் பாலகர் கோரணிகொண்டு
கலியுகமீதில் இவர்மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலம் மிஞ்ச
கலகல என்று மலசலம் வந்து
கால்வழிமேல்வழி சார நடந்து
தெளிவும் இராமல் உரை தடுமாறி
சிந்தையும் நெஞ்சமும் உலைந்து மருண்டு
திடமும் உலைந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதரவு ஏதென நொந்து
மறையவன் வேதன் எழுதியவாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனி என கண்டம் இனியென தொந்த
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற
கடன்முறை பேசும் என உரை நாவு
உறங்கி விழுந்துகை கொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிட வந்து
பூதமும் நாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே.

வளர்பிறைபோல எயிறும் உரோம
முஞ்சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடுவீசி உயிர் கொடுபோக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவர் காலம் அறிந்து
பழையவர் காணும் எனுமயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சு பறந்திட நின்றவர்பந்த
ரிடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேக விசாரியும் என்று
பலரையும் ஏவி முதியவர் தாமி
ருந்த சவம் கழுவச் சிலரென்று
பணிதுகில் தொங்கல் களபமணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை
வரிசை கெடாமல் எடுமென ஓடி
வந்திளமைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வைவே நொந்து
விறகிடைமூடி அழல்கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே.

*நிறைவு பெற்றது.*

## பட்டினத்தடிகள் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேனினி?

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட் சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை யாதரித்து - தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்?

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலுந் தோள்மேலுங்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டுந் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டுவேன்?

நொந்து சுமந்துபெற்று நோவாம லேந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றுந் தாய்தனக்கோ
மெய்யிலே தீ மூட்டுவேன்?

அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - உரிசியுள்ள
தேனே! அமிர்தமே! செல்வத் திரவியபூ
மானே! எனவழைத்த வாய்க்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் - உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு." (திருக்குறள்)

**திருமதி இராஜராஜேஸ்வரி சரவணபவானந்தன் (கண்ணன்)
அவரது மரணச் செய்தி கேட்டு.**

- உடன்வந்து இரவு பகலாக அரும்பாடுபட்ட உற்றார், உறவினர், அயலார், நண்பர்களுக்கும்.
- நேரில் வந்து ஆறுதல், அநுதாபம் தெரிவித்தோருக்கும்.
- இறுதிச் சடங்கில் கலந்து பலவகையில் உதவியோருக்கும்.
- தந்தி, தொலை பேசி மூலம் தமது அநுதாபங்களைப் பகிர்ந்து ஆறுதல் வார்த்தைகள் கூறியோருக்கும்.
- மலர்மாலைகளால் அஞ்சலி செலுத்தியோருக்கும்.
- எம்மோடு உடன் நின்று, தோழோடுதோழ் தந்து உதவிய எம் அயலவர்க்கும்.
- மேலும் பலவேறு வழிகளிலும் எமது துயரத்தைப் பகிர்ந்து கொண்டோருக்கும.
- இன்றைய சமிண்டி கரணக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும்.
- இம்மலரைக் குறுகிய காலத்தினுள் தொகுத்து வெளியிட உதவி யோருக்கும், அச்சகத்தாருக்கும்.
- ஆத்மசாந்திக்காக இறையருளை வேண்டிய அனைவருக்கும்.


எமது மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்,
கணவன், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

சிவன்வீதி,
உரும்பராய் கிழக்கு
உரும்பிராய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடைடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
இந்தமாற்றம் உலக நியதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

D.By: Theeban, (S) Print, Colombo - 06.